(6) அறிக்கைகள் அளித்தல்.

(அ) சிறைச்சாலைகளையும், அவற்றுடன் சேர்ந்த துறைகளையும் பற்றிய பரிந்துரைகளின்மேல் அரசு எடுத்த நடவடிக்கை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU S. AGNI RAJU : Mr. Speaker Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Jails and other allied Departments (Eighth Report).

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை.

THIRU M. KANDASWAMY : Mr. Speaker, Sir, I rise to present the Third Report (Fourth Assembly) of the Committee on Subordinate Legislation for the year 1968–69.

(7) 1968–69-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்.

திரு க. இராமமூர்த்தி : ஸார், ஆன் எ பாயிண்டு ஆஃப் ஆர்டர், கட் மோஷன் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜெனரல் டிஸ்கஷன் முடிந்த பிற்பாடு, ஒவ்வொரு டிமாண்டையும் எடுத்துக் கொள்கிற நேரத்தில் கட் மோஷன்கள் கொண்டுவரலாம்.

திரு க. இராமமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீட்டிற்கான அறிக்கையின் மீதான விவாதத்தைத் துவக்கி வைக்கின்ற நேரத்தில் இந்தத் துணை மதிப்பீட்டுகளைப்பற்றிய. . . . . .

திரு. டி. மார்டின் : ஆன் எ.பாயிண்டு ஆஃப் ஆர்டர், மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று ஒரு மணிக்கு விவாதத்தை முடிக்க வேண்டும்.

THIRU T. MARTIN : Sir, yesterday the Hon. Chief Minister undertook to give an answer in this House regarding the amount of Rs. 20,000 overspent in regard to the South Arcot district. To-day the Hon. Chief Minister has not come and I want to know from the Chair whether he is going to give an answer to-day or he has made arrangements through other Hon. Ministers to give an answer.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் அமைச்சர் அவர்கள் இருந்து, அதைக் கொடுக்கவில்லை என்றால் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம். முதல் அமைச்சர் அவர்களே இங்கே இல்லை, இல்லாத நேரத்தில் எப்படி பாயிண்டு ஆஃப் ஆர்டர் வரும் ?

THIRU T. MARTIN : Sir, I want to know whether the Hon Chief Minister has made arrangements through other Hon. Ministers to give an answer.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : நான் அதற்குப் பதில் சொல்லி விடுகிறேன். நேற்று நம்முடைய மதிப்பிற்குரிய திரு. மார்ட்டின் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்னையைப்பற்றி தென் ஆர்க்காடு மாவட்ட